# தன்னாட்சி, மக்களின் குரல் (Voice of People),

# அறப்போர் இயக்கம், தோழன் இயக்கம் மற்றும்

# Institute of Grassroots Governance (IGG)

**முகவரி:** 69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.
**மின்னஞ்சல் :** thannatchi@gmail.com
**தொடர்புக்கு:** நந்தகுமார் சிவா, பொதுச் செயலர், தன்னாட்சி/ 90032-32058


---

**17.06.2021**

**<u>பத்திரிகைச் செய்தி</u>**

## உள்ளாட்சிகளுக்கான நிதிப் பகிர்வு குறித்த விவரங்களை நிதி நிலை அறிக்கையிலேயே தனி இணைப்பாக (Appendix) வெளியிட வேண்டும்!

## தமிழக அரசுக்கு சமூக இயக்கங்களின் கோரிக்கை!

பல சமூக இயக்கங்கள் ஒன்றிணைந்து, நடைபெற்று முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக, உள்ளாட்சிகளுக்கான அதிகாரப்பரவல் தேர்தல் அறிக்கையினை வெளியிட்டோம்.

பல கோரிக்கைகள் இடம் பெற்றிருந்த அந்த தேர்தல் அறிக்கையில், மாநில நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் போதே, உள்ளாட்சிகளுக்கான நிதிப் பகிர்வு குறித்த விவரங்களை அரசு தனி இணைப்பாக (Appendix) தாக்கல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்திருந்தோம்.

வருகின்ற 21 ஜூன் 2021 அன்று கூட உள்ள சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதில், மேற்குறிப்பிட்ட இந்த கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, உள்ளாட்சிகளுக்குக்கான நிதிப் பகிர்வு விவரங்களை நிதிநிலை அறிக்கையிலேயே பிற்சேர்க்கையாக இணைத்துத் தாக்கல் செய்ய வேண்டுகிறோம்.

## தமிழகத்தில் நிலவும் குழப்பம்

இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் கூட தங்களுக்கு நிதி விடுவிக்கப்படவில்லை எனப் பல ஊராட்சித் தலைவர்கள் குறிப்பிடுகிறார்களே தவிர, இந்த மாதம் இவ்வளவு நிதி எங்களுக்கு மாநில நிதிக்குழு நிதியிலிருந்து வர வேண்டும் என்றோ, திட்ட நிதிகள் இவ்வளவு வர வேண்டும் என்றோ, கிராம ஊராட்சித் தலைவர்களால் குறிப்பாகச் சொல்ல முடியாத நிலையையே பரவலாகப் பார்க்க

முடிகிறது. இதற்குக் காரணம், ஒரு நிதி ஆண்டில் மத்திய மாநில அரசுகளின் நிதிப் பகிர்வின் மூலம், என்னென்ன நிதிகள், எவ்வளவு வரும் என்ற தகவல் அவர்களுக்குத் தெரிவிக்கப் படுவதில்லை.

## கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம்

மக்களின் கருத்தின் அடிப்படையிலும், ஊராட்சி பிரதிநிதிகளின் பங்களிப்போடும் தொகுக்கப்படும் ஒரு சிறந்த வழிமுறையாக இருக்கும் கிராம வளர்ச்சித் திட்டம், நிதிப் பகிர்வு குறித்த தெளிவின்மையால் தற்போது ஒரு சம்பிரதாயமாகவே பல கிராம ஊராட்சிகளில் நடைபெறுகிறது. இதனால், முறையான திட்டமிடல் என்பது சாத்தியம் இல்லாமலே போய்விடுகிறது.

நிதி குறித்து தெளிவின்மையால், திட்டப்பணிகள் மீதான பிடிப்பில்லாமல், பல கிராம ஊராட்சித் தலைவர்கள், பெரும்பாலான சமயங்களில் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் சொல்வதையெல்லாம் மறுபேச்சில்லாமல் ஏற்றுக் கொண்டு இயங்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர்.

## வெளிப்படைத்தன்மை அவசியம்!

கடந்த 2017 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு என்ற பெயரில், மாநில அளவிலேயே உள்ளாட்சிகளுக்கு வரவேண்டிய நிதியில் 20% நிதியை அரசு எடுத்துக் கொண்டது (பார்க்க: அரசாணை நிலை எண்: 84, ஊ.வ.ஊ.துறை நாள்: 31.03.2017). மாநில அரசு நினைக்கும் போதெல்லாம் அரசாணை மூலம் இதுபோன்ற அதிகார துஷ்பிரயோகம் நடைபெறாமல் தவிர்க்க வெளிப்படைத்தன்மை அவசியமாகிறது.

மேலும், உள்ளாட்சிகளுக்கான நிதிப் பகிர்வு குறித்த வெளிப்படையான பட்டியல் இருக்கும் பட்சத்தில், ஊராட்சி பிரதிநிதிகளுக்கு மட்டுமல்லாமல், கிராமசபையின் உறுப்பினர்களான பொது மக்களுக்கும் திட்டமிடுவதற்கும், முடிவுகள் எடுப்பதற்கும் அவை பயனுள்ளதாக இருக்கும்.

## கேரளா வழிகாட்டுகிறது

கேரள அரசு, அதன் மூன்றடுக்கு கிராம ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகள் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதிகளை தனித்தனியே பட்டியலிடுகின்றது. இந்த நடைமுறையைத் தொடர்ந்து பின்பற்றி வரும் கேரள அரசு; திட்ட நிதிகள், மாநில நிதிக்குழு நிதி, உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளுக்கான நிதி (அரசியலமைப்பு இணைப்புப் பட்டியல் 11 மற்றும் 12 அடிப்படையில்) ஆகியவற்றைத் தனித்தனியாகப் பிரித்து குறிப்பிடுவதால், நிதிப் பகிர்வு குறித்த எவ்வித குழப்பமும், எந்த மட்டத்திலும் ஏற்படுவதில்லை. இது, உள்ளாட்சிகள் தெளிவாக திட்டமிடவும், நிர்வாகம் மேற்கொள்ளவும் வழிவகுக்கிறது.

மேற்கு வங்கம் மற்றும் கர்நாடக மாநிலங்களிலும், நகர்ப்புற உள்ளாட்சிகள் மற்றும் கிராமப்புற உள்ளாட்சிகளுக்கான (கிராம ஊராட்சிகளைத் தவிர்த்து) நிதிப்பகிர்வு விவரங்கள் பெரும்பாலும் தனி இணைப்புகளாக நிதிநிலை அறிக்கையுடன் கிடைக்கப் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## சமூக நீதிக்கான கோரிக்கை

அரசியல் சாசனம், ஊராட்சிகளுக்கான நோக்கங்களாக சமூக நீதியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் குறிப்பிடுகிறது. பொருளாதார நிதிப் பகிர்வு குறித்த புரிதல் என்பது, வெறும் வரவுகளைப் பற்றி அறிந்து கொள்வது மட்டுமல்ல. மாறாக, சாமானிய மக்களுக்கானப் பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களைத் தீட்டுவதற்காகவும்தான். எனவே, தெளிவான நிதிப் பகிர்வு குறித்த தகவல் என்பது, சமூக நீதிக்கான பணி என்ற புரிதல் அரசுக்குத் தேவை.

## நம்பிக்கையோடு கோரிக்கை வைக்கிறோம்!

தொடர்ந்து அதிகாரப்பரவலுக்கான அவசியம் பற்றிக் குறிப்பிட்டு வரும் நமது நிதியமைச்சர் அவர்கள், இக்கோரிக்கையின் அவசியத்தை நிச்சயம் உணர்ந்து கொள்வார் என நம்புகிறோம்.

எனவே, இந்த நிதியாண்டு முதல், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சி, ஒன்றிய ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சிக்கான நிதிப்பகிர்வு மற்றும் ஒவ்வொரு பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிக்கான நிதிப்பகிர்வு, ஆண்டுக்கு, எந்தெந்த வகையில் எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் நிதிநிலை அறிக்கையில் பிற்சேர்க்கையாக இணைத்துத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று கோருகிறோம்.

தமிழ்நாடு அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று, அதிகாரப் பரவலிலும், சமூக நிதியை நிலைநாட்டுவதிலும் தனக்குள்ள உறுதியை மெய்ப்பிக்கும் என நம்புகிறோம்.

மிக்க நன்றி!

தங்கள் உண்மையுள்ள,



**(நந்தகுமார் சிவா)**

**For தன்னாட்சி, மக்களின் குரல் (Voice of People), அறப்போர் இயக்கம், தோழன் இயக்கம் மற்றும் Institute of Grassroots Governance (IGG)**